International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகளில் அறச்சீற்றம்

**செ. எழில்வளவன்**
**(BDU2410632780965)** (REF.No:bdu/12320632780286/Ph.D-K8/Part Time/Confirmation, Date:24.02.2026)
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை

**முனைவர் சோ.கண்ணதாசன்,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி) பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, தஞ்சாவூர் – 613005

**ஆய்வுச்சுருக்கம்**

உள்ளத்தின் ஆழத்தில் பொங்கும் உணர்சிசகளே படைப்பாளிகளின் படைப்புகளில் கலைவடிவங்களாக வெளிப்படும். இலக்கியமும் இதற்கு விதிவிலக்கன்று.

“கலைஞரின் கவிதைமழை” என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் சமுதாய அரசியல், பண்பாட்டு அவலங்களைக் கண்டு தம் உள்ளத்தில் ஊறிவந்த உணர்ச்சிப் பெருக்கைச் சொற்களில் கொண்டுவந்து அறச்சீற்றம் பொங்கிட கலைஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

எளிய மக்களின் வறுமையும், ஆதிக்கச் சாதியினரின் வருணாசிரம தருமமும் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான போக்கும் போலித்துறவியரின் வஞ்சக வாழ்க்கையும் தற்கால இளைஞர்களின் கட்டற்ற வாழ்க்கை முறையும் கலைஞரின் உள்ளத்தில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்தியவை. எனவே அவற்றின் மீதான தன் விமர்சனத்தை எண்ணத்தை – சிந்தனையை - கருத்தை அவர் சொற்களில் வெளியிடும்போது அவை தகிக்கும் சொற்களாக அறச்சீற்றத்துடன் வந்துவிழுகின்றன. அவற்றின்மூலம் கலைஞரின் உள்ளம் எதுவென்பது மட்டுமன்றி, அவருடைய பொது நல எண்ணமும் நமக்கு வெளிப்படுகின்றது என்று கூறலாம்.

**முதன்மைச் சொற்கள்**

தமிழ் ஆளுமைகள் – படைப்புத் தளங்கள் – அறச்சீற்றம் – பொதுவெளி – ஒழுங்கற்று விதிகள் – பண்பாட்டுச் சீரழிவுகள் – பாலியல்கேடுகள் – இடஒதுக்கீட்டு அளவுகோல் - கோபக்கனல்

## முன்னுரை

தமிழின் புகழ்பெற்ற படைப்பாளிகளுள் ஒருவர் கலைஞர் மு.கருணாநிதி. தமிழின் அத்துணை இலக்கிய வகைமைகளிலும் தம் முத்திரையை அழுந்தப் பதித்தவர், தேர்ந்து கொண்ட பாடுபொருளை இலக்கிய வடிவத்துக்கு ஏற்றவகையில் திறனாய்வாளர்களும் வியக்கும் வண்ணம் வழங்குவதில் அவர் வித்தகர். அவருடைய இலக்கியப் புகழ் அரசியல் புகழைவிட ஒருபடி உயர்ந்தது என்றே சொல்ல வேண்டும். மாணவர் பருவத்திலிருந்தே அவரிடமிருந்து நீங்காமல் இருந்த வாசிப்புப் பழக்கமும் தமிழ் ஆளுமைகளுடனான

அவருடைய நட்புறவும் தமிழின் தலை மாணாக்கனாய் அவரை வைத்திருந்தன. குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும் வீசிய பல்வேறு புயல்களும் அவருடைய இலக்கியப் படைப்புப் பணிக்கு இடையூறு செய்யாமல் கடந்து சென்றன. புதினம், சிறுகதை, தன்வரலாற்றுக் கட்டுரை, நாடகம், கடிதம், கவிதை, உரைவிளக்கம் என்று அவருடைய படைப்புத் தளங்கள் பரந்து விரிந்தவை. அவற்றுள் அவருடைய உள்ளம் கவர்ந்தவை கவிதைகளே என்றால் அது மிகையில்லை. அவருடைய கவிதைகளில் பனியின் குளிர்ச்சி யும் வெயிலின் வெம்மையும் கலந்திருக்கும். யாப்பிலக்கணத்தை முறைப்படி கற்றிராத அவர், மரபுக்கவிஞர்களும் பாராட்டும் படியான கவிதைகளை யாத்தவர். அவருடைய கவிதைகளின் சிறப்பு பாடுபொருளா? கவிதைகளில் வெளிப்படும் உணர்ச்சியா? யாப்பு அணைகளை உடைத்து வெளிவந்த புதுவடிவ நுரை வெள்ளமா? தாமே வந்துவிழுந்த சொற்களா? என்று திறனாய்ந்து முடிவுகூறுவது மிகக் கடினமே ஆனாலும் கலைஞரின் உணர்ச்சிகளே அவருடைய கவிதைகளாக மலர்ந்தன என்று கூறமுடியும்.

அவருடைய கவிதைகளில் ஒட்டுமொத்த முழுமைத் தொகுதியாக வெளியிடப்பட்டுள்ள “கலைஞரின் கவிதை மழையில் இடம் பெற்றுள்ள கவிதைகள் ஒவ்வொன்றும் கலைஞரின் உணர்ச்சியை நமக்கும் கொண்டு வந்து சேர்க்கின்றன சீரான ஆற்று வெள்ளம் போன்ற அவருடைய கவிதை நடை நுங்கு நுரைகளுடன் சொற்களைச் சுமந்து பொங்கிப் பிரவகித்து ஓடும்போது, படிப்பவர் உள்ளங்களை அவ்வெள்ளம் நனைக்கிறது. தென்றலாகவும் புயலாகவும் வீசும் அவரு டைய கவிதைகளில் அறசீற்றம் எதற்காக? எவ்வாறு? வெளிப்படுத்தப்படுகிறது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## சீற்றமும் அறச்சீற்றமும்

மனித உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை எட்டாக வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர்.[1]

இச்சாந்த உணர்ச்சியை இளம்பூரணர்

**செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும்**

**நெஞ்சோர்ந்து ஓடா நிலை”** [2]

என்று விளக்குகிறார்.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன அவை. இவற்றுடன் சாந்தம் என்னும் சுவையுணர்ச்சியையும் சேர்த்து வடநூலார் ஒன்பதாக “நவரசம்” எனக் கூறுவர்.

இச்சாந்த உணர்ச்சிக்கு நேர் எதிரானது சீற்றம் எனப்படும் வெகுளி உணர்ச்சி. வெகுளி தோன்ற எவை நிலைக்களங்களாக அமையும் என்பதையும் தொல்காப்பியர் பட்டியலிட்டுக் கூறுகிறார்.[3]

ஆனால் இன்றைய உளநூலார் சீற்றம் எவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றுகிறது என்பதற்கு தொல்காப்பியர் கூறாத வேறு காரணங்களையும் கூறுகின்றனர். ஏமாற்றம், தோல்வி, அவமானம், குற்றம், இயலாமை, அச்சம், பொறாமை போன்ற உணர்ச்சிகளே மடைமாற்றம் பெற்று சினமாக உருவெடுக்கின்றன என்கின்றனர்.

ஆனால் அறச்சீற்றம் என்பது சாதாரண சின உணர்ச்சியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இது பொதுவெளிகளில் ஒழுங்காற்று விதிகளை மீறுதல், நெறிமுறைகளைப் பேணாமலிருத்தல், அறத்துக்கு மாறாக நடந்து கொள்ளுதல் போன்றவற்றைக் காணும் போதோ பிற வகைகளில் அறியும்போதோ ஒருவர் உள்ளத்தில் தோன்றுவதாக மருத்துவ உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.[5]

நேர்மையையும் தம் கடமையையும் சரிவரக் கடைப்பிடிப்பவர்கள், அறநெறிகளை வழுவாது பின்பற்றுபவர்கள் மனித நேயமும் உயிரிரக்கமும் உடையவர்கள், கொடும் பழிக்கு அஞ்சுபவர்கள், தங்கள் கொள்கையி லிருந்து பின்வாங்காதவர்கள் எப்போதும் தீமையை வெறுப்பவர்கள் போன்றோரிடம் அறச்சீற்றம் கொப்பளித்துக் கிடக்கும் என்பதை உளவியல் நூல்கள் தெரிவிக்கின் றன. இவ்வகையினர் பெரும்பாலும் ஏதோ ஒரு நிலையில் தங்கள் துறையில் ஆளுமைத்திறன் மிக்கவர்களாக இருப்பர். தாங்கள் புகழுக்குச் சிறு அவமானம் நேர்ந்தாலும் அதனைப் பொறுத்துக் கொள்ளாமல் ஆரோக்கியமான வழிகளில் தம் அறச்சீற்றத்தை அவர்கள்

வெளிப்படுத்துவர். இலக்கியப் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் பாத்திரங்களின் வழியாக தம் அறச்சீற்றத்தை வெளிப்படுத்துவர்.

படைப்புகளில் பாத்திரங்கள் வழியாக அறச்சீற்றத்தை வெளிப்படுத்த வாயப்பில்லாத கவிதை போன்ற இலக்கிய வடிவங்களில் படைப்பாளனின் அறச்சீற்றம் நிகழ்வுகளின் மீது குவிக்கப்பட்டு விமர்சனமாக வெளிப்படுகிறது.

**கலைஞர் கவிதைகளில் அறச்சீற்றம்**

கலைஞரின் கவிதைகள் பெரும்பாலும் அவருடைய உணர்ச்சிகளிலிருந்து விளைந்தவை. அவ்வுணர்ச்சிகள் சமுதாய அவலங்களைக் கண்டு பொங்கியதால் பிறந்தவை. அவர் சமுதாய அவலங்களைக் கண்டு பொங்குவதற்குக் காரணங்காக அமைந்தவை. ஏழை எளியோரின் வறுமை, கல்வியறிவின்மை அதன் விளைவான சமுதாய அக்கறையின்மை அரசியல் விழிப்புணர்வின்மை போன்றவை. சர்வாதிகாரம், அதிகாரத் துஷ்பிரயோகம், அதிகாரப் பகட்டு, அதிகார முறைகேடுகள் ஊழல் போன்றவையும் கலைஞரின் கவிதைகளில் அறச் சீற்றத்தை வரவழைக்கின்றன. சமூகநீதியை மறுக்கும் இடஒதுக்கீட்டுக்கு எதிரானக்குரல், மூடநம்பிக்கை, வர்க்க பேதத்தை ஆதரிக்கும் வருணாசிரம தர்ம மனநிலை, பிறமொழித்திணிப்பு இனமான மற்றும் தன்மான உணர்வுக்கு இழுக்கு போன்றவையும் கலைஞர் தம் கவிதைகளில் அறச்சீற்றத்தை வெளிப்படுத்திக் காரணங்களாக அமைகின்றன என்பர்.[6] இதனைப் பின்வருமாறு பட்டியலிட்டு **அட்டவணைப்படுத்திக் காட்டலாம்.**

**சமுதாய அவலங்களைக் கண்டு அறச்சீற்றம்**

புலடைக்கம் என்னும் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி வாழாமல், அப்புலன்களின் போக்குக்கு ஏற்ப வாழும் தீயொழுக்க வாழ்க்கை துன்பத்தையே தரும் என்பதை அறச்சீற்றமுடன் கலைஞர் பின்வருமாறு கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

**"ஐம்புலனை இயக்காமல் இருப்பதுபோல்**
**நடிப்பதும் தீது"**

ஐம்புலனை அவிழ்த்துவிட்டுக் கோவில் மாடாய்த்திரிவதும் தீது" [7] (ப.117)

**அரசியல் அவலங்களைக் கண்டு அறச்சீற்றம்**

பதுக்கல், கடத்தல் பொன்ற செயல்கள் மூலம் ஏழை எளியவர்க்கு உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் கயவர்களை,

**"பதுக்கலிலே கெட்டிக்காரன்**
**பல உயிரைக் கொல்லுகிறான்.**
**கடத்திலிலே கைகாரன்**
**காலனையும் மிஞ்சுகிறான்**
**கொடுக்காதே நெல்என்பான்**
**கொடிதொரு விலங்காவான்"** (ப.197)

என்று வசைபாடும் கலைஞர், அவர்களிடமிருந்து உழவர் பெருங்குடி மக்கள் விடுதலை பெற வேண்டும் என்று குறிப்பிடுகிறார்[11] (ப.197)

**சமுதாய அவலங்களைக் கண்டு அறசீற்றம்**

ஏழைகளின் குடிசைகளைக்கொளுத்தி அவர்களைக் கண்ணீர் சிந்தவைத்து அல்லல் படுத்தும் தீயவர்களை அறச்சீற்றமுடன் விமர்சனம் செய்யும் கலைஞர் அவர்களைக்

| வ. எண் | அறச்சீற்றம் வெளிப்பட முதன்மைக் காரணங்கள் | சமுதாய அவலக் காரணங்கள் | அரசியல் அவலக் காரணங்கள் | பண்பாட்டு அவலக் காரணங்கள் |
|---|---|---|---|---|
| 1 | சமுதாய அவலங்கள் | வறுமை | இடஒதுக்கீடு மறுப்பு | முறையற்ற பாலியல் ஒழுக்கம் |
| 2 | அரசியல் அவலங்கள் | கல்வியறிவின்மை | வர்ணாசிரம தர்ம ஆதரவு | |
| 3 | பண்பாட்டு அவலங்கள் | வழிப்புணர்வின்மை<br>மூடநம்பிக்கை<br>புலடைக்கமின்மை | சர்வாதிகாரம்<br>அதிகார அத்துமீறல்கள்<br>விடுதலையைப் போற்றாமை | மொழியுணர்வு இன்மை<br>வாழக்கை முறை மாற்றம் |

கொடியவர்கள், பாம்பனையோர் பேயனையோர் துரோகிகள் என்றெல்லாம் இழித்திரைக்கின்றார். மேலும்

**சென்னைப் பட்டினத்தார் பலவீடு கொளுத்துகின்றார்**

**எரிவதெல்லாம் வீடென்றா கருதுகின்றீர்?**

**ஏழைகளின் வயிறன்றோ?**[8] (ப.199)

என்று வீழ்ந்தோர் துயரத்தைப் பாடுகின்றார்.

**சமுதாய அவலங்களின் அறச்சீற்றம்**

பொது நலத்துக்காகக் கொடுமைகளைக் கண்டு அஞ்சாது போரிடுவோரே உண்மை யான வீரர்கள் என்றும் சுயநலத்துக்காகக் கொடுமைகளைக் கண்டும் காணாதிருப்போர் விலங்கினும் கீழோர் என்றும் அறச்சீற்றமுடன் கலைஞர் குறிப்பிடுவதை,

**"ஆறிலும் சாவு நூறிலும் சாவு**

**ஆனது ஆகட்டுமென்று**

**அறப்போர் புரிவோன் அரிமாவீரன்**

**ஆறிலும் சாவு நூறிலும் சாவு**

**ஆனது ஆகட்டுமென்று**

**அயராதின்பம் அனைத்தும் துய்ப்போன்**

**வீரனே அல்லன் விலங்கினும் கீழோன்"**[9]

என்ற கவிதை வரிகளின் வழியாக அறியலாம் (ப.273)

**அரசியல் அவலம்**

தமிழர்களிடம் ஒற்றுமையுணைர்வு இல்லாததால் தமிழ்ப்பகைவர்கள் தங்கள் தீயநோக்கங்களை எளிதில் அடைவதாகக் குறிப்பிடும் கலைஞர், அறச்சீற்றம் மீதூர அவர்களை,

**"தமிழ்த் துசோகிகளைக் கண்டு**

**அஞ்ச வேண்டாம் – அவர்கள்**

**துருப்பிடித்த ஆணிகள்!**

**அண்ணா பெரியார் படங்களைக்கூட**

**அந்த ஆணிகள் தாங்கமாட்டா"**[12] (ப. 421)

என்று இழித்துரைக்கிறார்.

மூடநம்பிக்கையை வளர்த்துத் தங்கள் சுய நலம் பெருக்குவோரைக் கண்டு கலைஞர் அறச்சீற்றம் கொள்கிறார். அது அவருடைய கவிதையில் பின்வருமாறு பிரதிபலிக்கப் படுகிறது.

**"சமத்துவத்தைச் சதிராட விட்டுவிட்டு அரங்கில்**

**சதிசெய்து காலொடிய வைத்துச்**

**சாமிசெயல் நாமென்ன செய்வதெனச்**

**சமாளிக்கும் கூட்டத்தைச் சாட்டை கொண்டுதாக்கு**[13] (ப. 429)

உழைக்கும் மக்களுக்கு சலுகைகளும் வசதிகளும் கிடைத்தாக வேண்டும் என்பதை

**"சக்திக்கேற்ற உழைப்பு – தேவைக்கேற்ப வசதி**

**சலியாது உழைத்தலுத்த மக்களுக்கு உடனே வேண்டும்"**[14] (ப.429)

என்று குறிப்பிடும் கலைஞர், வெறும் வாய்ச் சொற்கள் உழைப்பவர்களுக்குப் பயன்படா என்பதை அறச்சீற்றமுடன்

**"அறிவுரைகள் பிரசங்கங்கள் ஈர விறகுக்கட்டை**

**பழுதின்றி சமைக்க உதவாது சமதர்மத்தை**[15] (ப.430)

என்று வெளிப்படுத்துகிறார்.

மேலும் உழைக்காமல் உண்டு கொழுத்திருப்போரை

**"நித்தம் ஆறுவேளை தின்பவனும்**

**உழைப்பாளியாம் காரணம்**

**நெற்றி வியர்வை நிலத்திவிழத் தின்கின்றானாம்**

**பித்த மனிதவன் என்று பேரிகை கொட்டிடுக**[16] (ப.431)

என்று நிந்தனை செய்கிறார் கலைஞர்.

வறுமையைப் போக்கிக் கொள்ள பாலியல் தொழிலைத் தேர்ந்தெடுக்கும் பாலியல் சகோதரிகளைப் பற்றிப் பாடும் கலைஞர் அவர் அவலவாழ்வுக்குச் சமுதாயமே காரணம் என்கிறார்.

**"பச்சைவிளக்குக் காட்டப்படாத காரணத்தால்**

**இச்சைக்கேற்ற இந்த விளக்கை**

**ஏற்றிக் கொண்டேன் என்கிறாள்**

**சிவப்பு விளக்குச் சீமாட்டி!**

**சீ…தூ! இஃதோ பிழைப்பா என்றால்**

**தூதூ! இந்தச் சமுதாயம் என்கிறாள்**[17] (ப.440)

இறுதியில் சமுதாயத் தீமைகள் அகல சிவன் தான் நெற்றிக்கண்ணைத் திறக்க வேண்டும் என்று அறச்சீற்றமுடன் கூறுகிறார்.

**"நான் நம்பவில்லை சிவனார் நெற்றிக்கண் திறந்தான்**

**இருந்தாலும் இங்கிருக்கும்**

**இழிவான சமுதாயத்தீமைகளை**

**எடுத்தப் போட்டுச் சாம்பலாகக்**

**நடக்க வேண்டும் அந்தக் கதையென விரும்புகிறேன்"**[18] (ப.17)

**அரசியல் அவலங்கண்டு அறச்சீற்றம்**

அண்ணாவின் ஆலயமணி என்று போற்றப் பட்ட திருச்சி எம்.எஸ்.மணி என்பவர் மறைந்த போது பிரிவுத்துயர் ஆற்றாது. தாம் பாடிய கவிதையில் எம்.எஸ்மணி இறுதிவரை ஒரே இயக்கத்திலேயே தொடர்ந்து இருந்ததைப் புகழ்நது, சிலர் தம் இயக்கத்தை பாராட்டித் தம் தன்னலத்துக்காகச் சென்றதை கலைஞர் பதிவுசெய்கிறார். இக்கவிதையில் அறச்சீற்றம் கொப்பளிக்கிறது.

**"நீ தலைகுனியாத் தமிழனாகவே**

**இறுதிவரை வாழ்ந்துவிட்டாய்!**

**சிவப்பும் கறுப்பும் கலந்த இருவண்ணக் கொடிதான்**

**செத்தபிறகு தன்மீது போர்த்தப்படும் என்று**

**மேடைஏறிச் சபதம் செய்தவன் எல்லாம் சந்தர்ப்பம் எனும்**

**பாடைஏறி இகழூர இடுகாட்டுக்குப் போய்விட்டான்**

**நீயோ இலட்சியத்தை விடாத இரும்பு மனிதன்** [19] (ப.446-447)

வர்ணாசிரம தர்மம் எனப்படும் சாதிக்கொரு நீதி என்னும் தத்துவத்தை மறுக்கும் கலைஞர், அதனை ஆதரிப்போரை அறச் சீற்றமுடன் கண்டிக்கவும் தயங்கவில்லை என்பதைப் பின்வரும் கவிதைவரிகள் காட்டுகின்றன.

**"தலையில் பாயும் இரத்தம்தான்**

**காலுக்கும்பாய்கிறது. ஆனாலும் பிரமனின்**

**தலையிற் பிறந்தோர் உயர்ந்த குலத்தோர் என்றும்**

**தொடையிற் பிறந்தோர் வைசிய வருணமென்றும்**

**காலில் தோன்றிய நாம் கடைநிலைச்சாதி யென்று**

**வகுத்தனர் வருணாசிர தருமம் என்றால்**

**பிரமனின் இரத்த நட்டத்தில் மட்டும்**

**ஏன் இத்தனை கோளாறு?**[20] (ப.527)

அஸ்தினாபுர வீதிகள் வழியாக திரௌபதி யைச் துச்சாதனன் குழல்பற்றி இழுத்து வந்த போது, தம்பாஞ்சாலி சபதத்தில் கதையை நிறுத்திவிட்டு அறச்சீற்றம் பொங்க பாரதியார்

**"நெட்டை மரங்களென நின்று புலம்பினர் பெட்டைப்**

**புலம்பல்கள் பிறர்க்குத் துணையாமோ"** [21]

என்று குறிப்பிட்டதுபோல, பிற்பட்டேர் இடஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பு காட்டியவர்களைக் கலைஞர் உலுத்தர்கள் என்றும் அவர்களை உதைக்கவேண்டும் ஓடஓட விரட்டவேண்டும் என்றும் குறிப்பிடுவதையும் (ப.541) அவருடைய அறச்சீற்றத்தின் உச்சமாகக் வேண்டியுள்ளது.

**"ஆயிரம்அடி பள்ளத்தில் விழுந்தவனைக்**

**கைதூக்கிக் கரையேற்றும் நேரத்தில்**

**கனமான பாறையொன்றை அவன் தலையில்**

**உருட்டிவிட எத்தனிக்கும்**

**உலுத்தர்களைக் கண்டால்**

**உதைக்கத்தான் வேண்டும்!**

**ஓடஓட விரட்டத்தான் வேண்டும்**[22] (ப.541)

பிற்பட்டோருக்கு இடஒதுக்கீடு அளிப்பதைத் தாம் ஆதரிப்பதால் தம் ஆட்சி கவிழ்க்கப் பட்டாலும் கவலையில்லை என்பதை,

**"ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்**

**ஆனது ஆகட்டுமே – இந்த**

**ஆட்சிதான் போகட்டுமே**[23] (ப.542)

என்ற கலைஞருடைய கவிதைவரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**பண்பாட்டு அவலங்களைக்கண்டு அறச்சீற்றம்**

பண்பாட்டுச் சீரழிவுகள், ஒழுக்கக்கேடு களைக் கண்டு அறச்சீற்றம் கொள்ளும் கலைஞர், பாலியல் கேடுகளையும் அறச் சீற்றமுடன் கண்டிக்கத் தயங்கவில்லை.

**"பெண்ணைத் தொடர்ந்து துறவு வருவானேன்? நம்**

**தண்ணைக் காவி மறைப்பானேன்?**

**பெண்வந்தால் துறவுவரும் சில துறவிகட்குத்**

**இருதுறவு ஏற்றவர்கள் இந்தத் தமிழகத்தில் பலருண்டு**

**இணிபதாம் இல்லறத்தை முதலில் துறந்து**

**கனிரசம் பால் தயிர் கமண்டலம் என்றிருந்து**

**கனஉடல் கொழுத்தவுடன்**

**துறவறத்தைத் துறக்கின்றார் வெளிப்படையாய்[24]** (பா.181)

என்னும் கவிதையில் துறவிகளின் பொய்யான ஒழுக்கத்தை அறச்சீற்றம் பொங்கச்சாடுகிறார்.

**பன்னாட்டு அறச்சீற்றம்**

தாய்மொழி என்கின்ற மொழியுணர்ச்சி சிறிது மின்றி பிறமொழி அதிக்கத்துக்கு வரவேற்பு அளிப்பவர்களை

**ஆட்சிமொழி தமிழென்றால் ஆகாதெனில் என்ன அறிவுடைமை?**

**ஆதிக்கம் பிறமொழிக்கா எனக் கேட்டால்**

**ஆம் எனில் என்ன அன்புடமை?" [25]**

**என்று இழித்துரைக்கும் கலைஞர்,** (ப.202)

**"விடுதலையின் வெளிச்சமெனும் சவுக்கடியால்**

**கெடுதலையின் இருட்கூட்டம் விலக்கிடுவோம்** (ப.202)

என்று அதற்குத் தீர்வும் சொல்கிறார்.

நாகரிகம் என்ற பெயரில் இன்றைய பெண்கள் அரைகுறை உடைத்தோற்றத்தில் உலவுதல் கண்டு உள்ளம் வெடிக்கும் கலைஞரின் அறச்சீற்றம் பின்வருமாறு வெளிப்படக் காணலாம்.

**"சேலாடும் விழிகள் மேற் செயற்கைப் புருவம்**

**சிவப்பாக இதழ்களிலே வண்ணப் பூச்சு**

**காலாடை அரையாடை அணிவதிலே கடும்போட்டி**

**கல்ரதங்கள் அஜந்தாக்கள் அத்தனையும் தலையில் ஏற்றிக்**

**கண்காட்சிப் பொருளாக நடக்கின்றாளே**

**அவளல்லள் புதுமைப்பெண்[27]** (ப.254)

**பண்பாட்டு அவலங்கண்டு அறச்சீற்றம்**

கண்ணியம், கட்டுப்பாடு இன்றி அகத்துறையாக இருக்க வேண்டிய காதலை புறத்துறையாக மாற்றி, காதலர்கள் பொது வெளியில் அநாகரீகமாக நடந்து கொள்ளுவதைக் கலைஞர் அறச்சீற்றம் பொங்கத் கண்டித்துள்ளதைப் பின்வரும் கவிதை வரிகள் காட்டுகின்றன.

**"ஊரார் எதிரிலேயே, கடற்கரையில் காருக்குள் – கலையரங்கில் காதல்சேட்டை என்ன நியாயம்?**

**ஊரார் எல்லாம் ஊனமுற்ற விழிபடைத்தோர் எனும் நினைப்போ?**

**அன்றிக் காதலர்கள் கண்மூடிக் கொள்வதாலே**

**காசினியே கண்மூடிக் கொண்டதாகத் துணிதல் நன்றோ?[28]** (ப.375)

**முடிவுரை**

சமுதாய அவலங்களைக் கண்டும் அரசியல் அவலங்களைப் அறிந்தும் பண்பாட்டு அவலங்களை நேரில் பார்த்தும் கலைஞரின் உள்ளத்தில் வெடித்த உணர்ச்சிகள், அவருடைய கவிதைகளில் அறச்சீற்றத்துடன் வெளிவந்து, அவருடைய உள்ளத்தை நமக்குக் காட்டிவிடுகின்றன. சமுதாய மற்றும் பண்பாட்டு அவலங்களைவிட, அரசியல் துறையில் படிந்த அவலங்களே அவரை மிகுதியும் பாதித்தவை என்பதால், அவ் அவலங்களின் மீதான அவருடைய விமர்சனப் பார்வை கோபக்கனலாகத் தகித்து வெம்மைமிக்க சொற்களாக அறச்சீற்றம் பொங்க வெளிப்பட்டுள்ளன என்று கூறினால் அது மிகையன்று.

**சான்றெண் விளக்கம்**

1. நூற்பா எண் 1, மெய்ப்பாட்டியல், தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, கந்தசாமி.இரா (ப.ஆ) அருணன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு (1995).ப.23
2. மெயப்பாட்டியல் – இளம்பூரணர்உரை, தொல்காப்பியம், கந்தசாமி, இரா.(ப.ஆ) அருணன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு 1995.ப.40
3. நூற்பா எண் 07. மெய்ப்பாட்டியல், தொல்காப்பியம், வெள்ளைவாரணன்.க. (ப.ஆ) பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,

முதற்பதிப்பு.ப.45

4. அங்கயற்கண்ணி.சு, மரு, உளநோய் மருத்துவம், கலையெழில் பதிப்பகம், கோயம்புத்தூர், முதற்பதிப்பு 2013. ப.63
5. இரவீந்திரன்.ஆ.மரு, மனவியல் அறிவோம் ஸ்ரீநிதி பப்ளிஷர்ஸ், சென்னை, முதற்பதிப்பு 1988. ப.108
6. ப.234 வேலுச்சாமி.ந.(ப.ஆ) கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு மே 2008.
7. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.117
8. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.199
9. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004. ப.273
10. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.197
11. ப.197 கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.
12. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004. ப.421
13. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.429
14. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.429
15. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.430
16. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.431
17. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.440
18. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004. ப.441
19. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004. ப.446-447
20. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004. ப.572
21. பாஞ்சாலிசபதம், பாரதியார் கவிதைகள், கவிக்குயில் பதிப்பகம், வேலூர், முதற்பதிப்பு 1990. ப.135
22. கலைஞரின் கவிதைமழை, சீதைபதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு மார்ச் 2004.ப.541
23. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.542
24. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.181
25. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.202
26. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004.ப.202
27. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004. ப.254
28. கலைஞரின் கவிதை மழை, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 2004. ப.375